# போலி ஆன்லைன் லாட்டரி மூலம் மோசடி 8 பேர் கைது



திருவாரூரில் வெளிமாநில ஆன்லைன் லாட்டரிகளை போலியாக தயாரித்து மோசடியில் ஈடுபட்ட 8 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து ரூ.12 லட்சம் மற்றும் மடிக்கணினிகள், செல்போன்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

பதிவு: டிசம்பர் 26, 2021 23:35 PM

திருவாரூர்:
திருவாரூரில் வெளிமாநில ஆன்லைன் லாட்டரிகளை போலியாக தயாரித்து மோசடியில் ஈடுபட்ட 8 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து ரூ.12 லட்சம் மற்றும் மடிக்கணினிகள், செல்போன்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

**தனிப்படை**

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஆன்லைன் லாட்டரி சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதை தடுக்க தஞ்சை சரக டி.ஐ.ஜி. பிரவேஷ்குமார் போலீசாருக்கு உத்தரவிட்டு இருந்தார். அதன்படி தஞ்சை மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ஜெயசந்திரன் மேற்பார்வையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் மகேந்திரன், கந்தசாமி ஆகியோர் தலைமையில் கண்ணன், இளையராஜா சுந்தர்ராமன், விஜய் ஆகியோர் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது.
திருச்சி, தஞ்சை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் வெளிமாநில ஆன்லைன் லாட்டரிகளை போலியாக தயாரித்து வாட்ஸ்-அப் குழு அமைத்து பொதுமக்களை ஏமாற்றி பணம் பறிப்பதாக தனிப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

**தேடுதல் வேட்டை**

இதையடுத்து தனிப்படை போலீசார் தீவிர விசாரணை நடத்தி, தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது திருவாரூரில் ஒரு இடத்தில் வைத்து ஆன்லைன் லாட்டரிகளை போலியாக தயாரித்து மோசடியில் ஈடுபட்ட திருவாரூர் பெரிய மில் தெருவை சேர்ந்த சரவணன் (வயது48), கொரடாச்சேரி வடக்குமாங்குடியை சேர்ந்த குமரேசன் (52), கூத்தாநல்லூர் வாழச்சேரியை சேர்ந்த விஜய்குமார் (35), மன்னார்குடி பைங்காநாடு பகுதியை சேர்ந்த ராஜேஷ் கண்ணா (32), கூத்தாநல்லூர் பொதக்குடியை சேர்ந்த மணிகண்டன் (30) மற்றும் திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்த மீரான் (37), திருச்சி தொட்டியம் காட்டுபுத்தூரை சேர்ந்த சண்முகவேல் (27) மற்றும் ஒரு பெண் உள்பட 8 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து லாட்டரி சீட்டு கட்டுகள், ரூ.12 லட்சம், 4 மடிக்கணனிகள், 14 செல்போன்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

**பாராட்டு**

இதுகுறித்து திருவாரூர் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஷ் 8 பேர் மீது வழக்குப்பதிவு செய்தார்.

வெளிமாநில ஆன்லைன் லாட்டரிகளை போலியாக தயாரித்து மோசடியில் ஈடுபட்டவர்களை பிடித்த

தஞ்சை சரக தனிப்படை போலீசாரை உயரதிகாரிகள் பாராட்டினர்.

Source:
https://www.dailythanthi.com/Districts/Chennai/2021/12/26233501/8-arrested-for-fraudulent-online-lottery.vpf